www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Ts10T

## தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

15-02-2023

## வகுப்பு 10
## தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

**குறிப்பு : இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளை கொண்டது.**
**விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் செந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15×1=15**

1) திருச்சி அருகே அல்லூரில் 'திருவள்ளுவர் தவச்சாலை' அமைத்தவர் பாவாணர் நூலகம் உருவாக்கியவர்.
   அ) பெருஞ்சித்திரனார் ஆ) இளங்குமரனார்
   இ) தமிழழகனார் ஈ) பாரதியார்

2) கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.
   – இத் தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்
   அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு

3) 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' – இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

4) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

5) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ....... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .........
   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

6) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் ........
   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

7) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.
   அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
   இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

8) பொருத்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க
   1) வினைமுற்று i) கெடு
   2) தொழிற்பெயர் ii) கட்டு
   3) முதனிலைத் தொழிற்பெயர் iii) எய்தல்
   4) வினையடி iv) வந்தான்
   அ) 1 - iv, 2 - iii, 3 - ii, 4 - i ஆ) 1 - iii, 2 - i, 3 - iv, 4 - ii
   இ) 1 - iv, 2 - iii, 3 - i, 4 - ii ஈ) 1 - i, 2 - iii, 3 - ii, 4 - iv

9) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் .........
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

10) திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி – இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்க.

அ) திருச்சி, புதுவை, நெல்லை, உதகை ஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை

இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை

11) கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

'செம்பொ னடிச்சிறு கிங்கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யாரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டோடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாட'

12) **பாடலின் இலக்கிய வகை**

அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்

இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

13) 'கிண்கிணி' என்னும் அணிகலன்

அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது

இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

14) குண்டலமும் குழைக்காதும் – இலக்கணக் குறிப்பு தருக.

அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை

இ) உவமைத் தொகை ஈ) வினைத் தொகை

15) சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், பைம்பொன்

இ) கலந்தாட, சரிந்தாட ஈ) வடமாட, பதிந்தாட

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4×2=8
**(21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க**

அ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு. இரா.இயங்குமரனார்.

ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.

17) ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர் குறித்து எழுதுக.

18) அவையம் – குறிப்பு வரைக.

19) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20) காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

21) 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5×2=10

22) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23) அ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது – **இத் தொடரைத் தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.**

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) விடு – வீடு ஆ) இயற்கை – செயற்கை

25) **கலைச்சொற்கள் தருக.** அ) Space Technology ஆ) Epic Literature

26) மதில் போர் பற்றிய திணைகளை விளக்குக.

27) **தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

அ) முப்பால் ஆ) நானிலம்

28) 'மலைந்து' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2x3=6

29) நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.

30) தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் – இடம் சுட்டி விளக்குக?

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ) விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3=6
**(34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33) 'சித்தாளின் மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது' – இடம் சுட்டிப் பொருள் தருக.

34) **அடிபிறழாமல் எழுதுக.**

'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்

'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3=6

35) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) **அலகிட்டு வாய்பாடு தருக.**

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5x5=25

38) அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு ஒரு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) கருணையனின் தாய் மறைவிற்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



39) அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்துப் பாராட்டு பெற்றதைப் பற்றி உறவினருக்குக் கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) வீட்டு எண்.63, தமிழ்நகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் அறிவரசனின் மகள் யாழினிக்காக, கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42) அ) தொலைக்காட்சி, காணொலி விளையாட்டு, சமூக ஊடகங்களில் மதிப்பவர்களை நெறிப்படுத்த நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

1. புத்தகம் படிக்கச் செய்யலாம்
2.
3.
4.
5.

SIVAKUMAR.M,
Sri Ram Matric HSS,
Vallam-627809
Tenkasi Dist.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

If you talk to man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.

Language is the road map of a Culture. It tells you where its people come form and where they are going. – Rita Mae Brown

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க. 3×8=24

43) அ) தமிழின் சொல்வளம் குறித்தும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகள் எழுதுக.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் கதையின் வழி மனித நேயம் வெளிப்படுவதை விவரிக்க.

44) அ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றினை எழுதுக.

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – தமிழக எல்லை – தமிழன்னை – இலக்கியங்கள் – இலக்கண நூல்கள் – சான்றோர் வளர்த்த தமிழ் – முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிமுறைகள் – விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.

- - - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com